# ஹஜ்

ஹஜ் இஸ்லாத்தின் ஐந்தாவது அடிப்படையாகும். இது முஸ்லிம்கள்மீது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது. இது சிறப்புமிக்க அமல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது, அமல்களில் எல்லாவற்றையும்விடச் சிறந்தது எது, அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர்மீது ஈமான் கொள்வது எல்லாவற்றையும்விடச் சிறந்தது. மேலும் கேட்கப்பட்டது, அதற்கு அடுத்தது எது. அதற்கு அவர்கள் ﷺ கூறினார்கள், ஹஜ் மப்ரூர், அதாவது எந்த ஹஜ்ஜில் எந்த ஒரு தவறும், பாவச்செயலும் ஏற்படாமல் செய்யப்பட்டதோ அந்த ஹஜ். (புக்ஹாரி,முஸ்லிம்). மற்றொரு அறிவிப்பில் ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கேட்டேன், இறைத்தூதர் ﷺ அவர்களே, நாம் ஜிஹாது செய்வதைச் சிறந்த அமல் என்று கருதுகிறோம், அப்படியானால், நாங்கள் (பெண்கள்) ஜிஹாது செய்யக்கூடாதா? அவர்கள் ﷺ கூறினார்கள், இல்லை, நீங்கள் மப்ரூரான ஹஜ்ஜை நிறைவேற்றுங்கள், ஏனெனில், அதுவே மிகச் சிறந்த செயலாகும் (புக்ஹாரி,முஸ்லிம்). ஹஜ் மனிதர்களுடைய பாவங்களை நீக்கும் பரிகாரமாகும். ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது:

**مَنْ حَجَّ وَلَمْ يَرْفُثْ وَلَمْ يَفْسُقْ رَجَعَ مِنْ ذُنُوبِهِ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ (متفق عليه)**

*பொருள்: எவர் ஒருவர் ஹஜ் கடமையை நிறைவேற்றி, அவர் அந்நிலையில் எவ்வித மானக்கேடான அல்லது பாவச்செயலையும் செய்யாமலிருந்தாரோ அவர் தன் தாய் வயிற்றிலிருந்து பிறந்த குழந்தை பாவங்களிலிருந்து தூய்மையானதாக இருப்பதைப்போன்று அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்பட்டவராகத் திரும்புவார்* (புக்ஹாரி,முஸ்லிம்).

**الْعُمْرَةُ إِلَى الْعُمْرَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُمَا، وَالْحَجُّ الْمَبْرُورُ لَيْسَ لَهُ جَزَاءٌ إِلَّا الْجَنَّةُ (متفق عليه)**

*பொருள்: (ஒருவர் உம்ரா செய்து பின்பு மறுபடியும் ஒரு உம்ராவை நிறைவேற்றினால்) இந்த உம்ரா அந்த இரு உம்ராக்களுக்கும் இடையிலான காலத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குக் காரணமாக, பரிகாரமாக ஆகிவிடுகின்றது, மற்றும் மப்ரூரான ஹஜ்ஜின் கூலி சுவர்க்கம் மட்டுமே* (புக்ஹாரி,முஸ்லிம்). அவர்கள் ﷺ மேலும் கூறினார்கள், உம்ரா நிறைவேற்றுபவர்கள் மற்றும் ஹஜ் நிறைவேற்றுபவர்கள் அல்லாஹ்வின் விருந்தினர்களாவர். அல்லாஹ்தான் அவர்களை அழைத்துள்ளான், அவர்கள் அவனுடைய அழைப்பினை ஏற்று வந்துள்ளார்கள். இந்நிலையில். அவர்கள் அல்லாஹ்விடம் ஏதும் கேட்பார்களேயானால், அவன் நிச்சயம் அவர்க

www.uzairfalahi.com

ளுக்கு அதனை அளிப்பான் (அல் பஜ்ஜ்ஸாஸ்). ஹஜ் என்பது மனத்தூய் மைக்கான மிகச் சிறந்த வழியாகும், இதன் மூலம் மனதில் தூய்மையும் ஒன்றைச்செய்வதில் அல்லாஹ்வுக்காக மட்டுமே என்ற தூய எண்ணமும் உண்டாகும். ஹஜ் செய்பவர் அல்லாஹ்வின் பாதையில் கஷ்டங்களையும் இன்னல்களையும் எதிர்கொள்ளும் பழக்கத்தினைப் பெற்றுவிடுகிறார். கட்டுப்பாடும் சகிப்புத் தன்மையும் அவனிடத்தில் சிறப்பான முறையில் பெறப்படுகின்றன. ஹஜ் ஒரு மனிதனுடைய மனதில் முழுமையாகவே அல்லாஹ்வுக்கு அடிபணியும் பண்பிற்கு வித்திடுகின்றது மற்றும் இறைத் தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றி நடப்பதற்குத் தயார்படுத்தி வழிவகுக் கின்றது. ஹஜ்ஜின் மூலமாக ஒரு மனிதன் அல்லாஹ்வினால் அருளப்பட்ட செல்வம், அவன் அளித்த பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகிய அருட் கொடைகளுக்கு நன்றி செலுத்துபவனாக ஆகிவிடுகிறான். இந்த உலகத் திலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் ஹஜ் ஒரு வருடாந்திர மாநாடாக அமைகிறது. இதில் உலகெங்கிலிருந்தும் முஸ்லிம்கள் அனைவரும் நாடு, மொழி, நிறம், குலம் ஆகிய எவ்விதப் பாகுபாடுமின்றி, அவர்களுடைய ஈமான் மற்றும் விசுவாசத்தின் அடிப்படையில் ஒன்றுகூடி அவர்களுடைய மகத்தான ஒருமைப்பாடு மற்றும் சமத்துவத்தினையும் இஸ்லாமிய சகோ தரத்துவத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றனர். இவ்வகையில், இஸ்லாத்தின் அழைப்பினை அனைவருக்கும் கொடுக்கும் வகையில் ஒருவருக்கொருவர் உறுதுணை யாய் இருக்கின்றனர். ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக்கொள்வதற் கும் மற்றவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் மற் றும் அவற்றைப் போக்குவதற்கான வழிகளையும் கண்டறிய முற்படுகின் றனர்.

* * *

www.uzarfaldhi.com